திரு. ம. ஆபிரகாம் அவர்கள் 1984 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் செங்கற்பட்டு மாவட்டம் ஆலந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார்.

திரு. ஆர். சுப்ப ஐயர் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை செங்கற்பட்டு பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

(ஆ) முன்னாள் உறுப்பினர் திரு. பி. இராமமூர்த்தி மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் 15—12—1987 ஆம் தேதியன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS

1988 ஜனவரி 27]

திரு. பி. இராமமூர்த்தி அவர்கள் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம், மதுரை வடக்குத் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1953 ஆம் ஆண்டிலிருந்து 1957 ஆம் ஆண்டு வரை சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவராகவும் பணிபுரிந்துள்ளார். 1967 ஆம் ஆண்டிலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற மக்களவை உறுப்பினராகவும், 1960 ஆம் ஆண்டிலிருந்து 1966 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1977 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரையும் இருமுறை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1952 ஆம் ஆண்டிலிருந்து 1956 ஆம் ஆண்டு வரையும் மீண்டும் 1964 ஆம் ஆண்டிலிருந்து சமீப காலம் வரையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக் குழு (பொலிட் பீரோ) உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)